தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
Tamil Information Technology Association

Regd. No: N(A)879

12 September 2004

**Press Release:**

## கிளிநொச்சியில் இலவச மழலைகள் கணினிப் பூங்கா



விரிந்த கண்களுடன் அப்படி என்ன கேட்கின்றான் இந்தக் குழந்தை? தான் வளரும்போது தனக்கொரு கணினிப் பூங்காவையா?

வன்னிப் பிரதேசத்தில், முதன்முதலாக சிறுவர்களுக்கான கணினிப் பூங்கா ஒன்று, வரும் 26 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமையன்று, கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் திறந்து வைக்கப்படவுள்ளது. "இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினிப் பூங்கா" எனப் பெயரிடப்படவுள்ள இக்கணினிப் பூங்காவை, தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் மாணவர் அமைப்பும் இணைந்து நிர்வகிக்கவுள்ளன. இக்கணினிப் பூங்காவைத் திறப்பதற்கான நிதி உதவியினை, இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயமும், ஐக்கிய அமெரிக்காவில் வதியும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களான திரு, திருமதி நிரா இரட்ணாதிக்கம் அவர்களும் இணைந்து வழங்கியுள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு விடுமுறையில் வருகை தந்து தாயகப் பிரதேசத்தில் சில சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டிருந்த திரு, திருமதி நிரா இரட்ணாதிக்கம் தம்பதியினர், சிறுவர்களுக்கான கணினிப் பூங்கா ஒன்றை கிளிநொச்சியில் திறப்பதற்கான சாத்தியங்கள் குறித்து தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்புடன் (TITA) கலந்துரையாடியதோடு, அதற்காக உதவுவதற்கும் முன்வந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து, மாணவர் அமைப்பின் உதவியுடன் கிளிநொச்சியில் இதற்கான களநில வேலைகளை ஆரம்பித்த TITA அமைப்பு, இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் பாரிய உதவியையும் இத்திட்டத்திற்குப் பெற்றுக் கொண்டது.

எவ்வித கட்டணங்களுமின்றி முற்றிலும் இலவசமாக இயங்கவுள்ள இக்கணினிப் பூங்கா, கணினி வசதிகளை மட்டுமன்றி, சிறுவர்களுக்கான பூங்கா ஒன்றுக்குரிய சுற்றுச் சூழலையும் கொண்டதாக அமையவுள்ளது. சிறார்களுக்கு, அவர்களுக்கேற்ற விதத்தில் கணினி அறிவூட்டக்கூடிய விசேட கல்வித்திட்டம் ஒன்றும் TITA அமைப்பினால் இப்பூங்காவிற்கென தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் சிறுவர் இல்லங்கள் முதல் தொழில் பயிற்சி நிலையங்கள் வரை, பல்வேறு சமூகசேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயமும், இப்பிரதேசங்களில் 13 கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையங்களைத் திறந்துள்ள TITA அமைப்பும் இணைந்து, ஏற்கெனவே 3 இலவச கணினிப் பயிற்சி நிலையங்களை யாழ்ப்பாணத்திலும் வட்டக்கச்சியிலும் திறந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டுப் பிரிவு, தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு - 12 செப்டெம்பர், 2004.
*For further media enquiries, please contact:*
Navu ( UK ) +447946795856 , Jeya ( Sri Lanka ) +94777780304

TITA, Saraswathy Hall, No.75, Lorenz Road,
Colombo-04, Sri Lanka.
Web: www.tamilita.org

Voice: +94-777-271467
+94-777-780304
Email: admin@tamilita.org